இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவிடயல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக்கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் V
இறுதிப் பரீட்சை- 2017/2018
LWU 4326 /LLU6814 – தீங்கியல் சட்டம்
காலம்- 03 மணித்தியாலங்கள்

திகதி: 05.03.2020 காலம்: பி.ப.1.30 – பி.ப.4.30

உமது கையெழுத்து தெளிவானது என்பது தயவு செய்து உறுதிப்படுத்துக.
பரீட்சை மண்டபத்திற்குள் அதிகாரமற்ற ஆவணங்கள், கையடக்க தொலைபேசி அல்லது வேறு ஏதேனும் மின்சாதனப் பொருட்கள் வைத்திருப்பது பரீட்சை குற்றம் ஒன்றாகும்.
மொத்த வினாக்களின் எண்ணிக்கை: 7

நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

1. மூதுரையானது நல்ல உணர்விலும் நீதி மீதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒருவர் தன்னை நோக்கி செய்யப்பட்ட செயலொன்றுக்கு வரவேற்றிருந்தால் அல்லது சம்மதம் அளித்திருந்தால் அந்த செயலினால் அவர் பாதிக்கப்படுகின்ற போது, அது ஒரு பிழை என்ற வகையில் முறைப்பாடு ஒன்றை மேற்கொள்ள முடியாது.

   Lord Herschell in *Smith* v. *Baker* (1891 ) A.C. 325 at page 360

   இந்த கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள மூதுரை என்ன? இந்த மூதுரையின் கூறுகளையும் தீர்க்கப்பட்ட வழக்குகளில் அவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள பொருள் விளக்கங்களையும் விளக்குக.

2. ஜனக மற்றும் நளினி ஆகியோர் தமது ஆறு வயது மகன் நவீனுடைய பிறந்த நாள் கொண்டாட்டத்தை நடத்தினர். இந்த விழாவுக்கு பல சிறுவர்கள் வருகை தந்தனர். நவீனும் அவனுடைய சிறந்த நண்பனான ரிஸ்வியும் சிறிது நேரத்தின் பின்பு பிறந்தநாள் கேக்கின் மேல் மெழுகுவர்த்தியை ஏற்றுவதற்காக மேசை மீது நளினி வைத்திருந்த தீப்பெட்டியை கண்டனர். அவர்கள் இருவரும் தீப்பெட்டியையும், மெழுகுவர்த்தியையும் எடுத்துக் கொண்டு நவீனுடைய படுக்கையறைக்கு சென்று கொளுத்தினர். ஏற்றிய மெழுகுவர்த்தி ஒன்று நவீனுடைய கட்டிலில் விழுந்து படுக்கை விரிப்பு தீப்பற்றியது. இரு சிறுவர்களும் அறையை விட்டு வெளியேறினர். ஆயின் இந்த தீயைப்பற்றி யாரிடமும் எதுவும் கூறவில்லை.

   ஜனக படுக்கையறை யன்னல் வழியாக தீப்பிழம்பு வருவதை அவதானித்து பின்பு தீயணைக்கும் சேவைக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டான். நளினி வீட்டை சுற்றி ஓடியதுடன்

அனைத்து சிறுவர்களையும் வீட்டு தோட்டத்திற்கு வருமாறு அழைத்தாள். தீயணைப்பு ஆட்கள் வீட்டை அடைந்த போது தீ வீடு முழுவதும் பரவியிருந்தது.

அவனுடைய வீட்டுக்கருகில் வீதியில் வசித்து வந்த நான்கு வயது பிள்ளையான சுரேனை காணவில்லை என்பதை நளினி அவதானித்தாள். தீயணைப்பு ஆட்களின் தலைவர் பெரேரா எரிந்து கொண்டிருந்த வீட்டுக்கு சென்று சுரேனை தேடினார். ஏனைய தீயணைப்பு ஆட்கள் தீயை கட்டுப்படுத்த முயற்சித்தனர்.

வீட்டு கூரையின் கீழ் இருந்த சீலிங்கின் ஒரு பகுதி பொரேராவின் தலையில் விழுந்து அவர் கடுமையான காயத்திற்கு உள்ளானார். கண்டியில் நண்பியை சந்திக்க சென்றிருந்த சுரேனுடைய தாயாரான நிர்மலாவுக்கு அயலவர் ஒருவர் தொலைபேசியில் அழைத்து ஜனகவின் வீடு தீப்பற்றியது எனவும் சுரேனை காணவில்லை எனவும் தெரிவித்தார் இதனை கேள்வியுற்ற கர்ப்பிணியான நிர்மலாவுக்கு கருச்சிதைவு ஏற்பட்டு உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள். பின்னர் சுரேன் மரம் ஒன்றின் பின்பகுதியல் ஒளிந்திருந்தான் எனவும், அவன் பாதுகாப்பாக இருந்தான் எனவும் கண்டுபிடிக்கப்பட்டது. எனினும் சுரேன் கடுமையான மனத்தாக்கத்திற்குள்ளானான்.

பெரேரா, நிர்மலா மற்றும் சுரேன் ஆகியோர் தொடர்பாக ஜனக மற்றும் நளினி ஆகியோருக்குள்ள பொறுப்புடமையை ஆராய்க.

3. *ஒரு திறத்தவருக்கு இன்னுமொரு நபருடைய செயல்கள் அல்லது செய்யாமைகளின் விளைவாக ஏற்பட கூடிய பல்வேறுபட்ட இழப்பீடுகளுக்கு, சட்டமானது பிரயோகிக்கப்படும் பல்வேறுபட்ட அணுகுமுறைகளுக்கு இடையில் முக்கியமான வேறுபாடுகள் உள்ளன என்பது எப்போதும் அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களுள் ஒன்றாகும். ஒரு நபருக்கு அல்லது ஏனையவர்களின் சொத்துக்களுக்கு உளறு ஏற்படுத்தாமல் தடுக்க கூடிய ஒரு கவனக் கடப்பாட்டை கொண்டிருத்தல் ஒரு விடயமாகும். ஏனையவர்களுக்கு பூரணமான பொருளாதார நட்டத்தை ஏற்படுத்துவதில் இருந்து தவிர்த்தல் இன்னுமொரு முக்கியமான விடயமாகும்.*

Lord Bridge in *Caparo Industries PlC* v *Dickman* & Others (1990 ) I All ER 568.

*இந்த கூற்றின் பின்னணியில், கவனயீனம பொறுப்புடமை பரப்புக்களின் கவனயீன கூற்றுக்கள் தொடர்பான ஒரு வேறுபட்ட பொறுப்புடமையுடன் தொடர்புபட்ட விதிகள் எவ்வாறு உருப்பெற்றன என்பதனை ஆராய்க. நீர் இலங்கை, தென்னாபிரிக்கா மற்றும் ஆங்கில சட்டங்களை ஆராய்தல் வேண்டும்.*

4. லொறி சாரதி ஒருவரான பண்டா தனது சாரதி அனுமதி பத்திரத்தை புதுப்பிப்பதற்காக மோட்டார் வாகன திணைக்களத்திற்கு சென்றான். ஒரு குறிப்பிட்ட வருத்தத்திற்காக மருத்துகள் எடுக்க ஆரம்பித்ததன் காரணமாக, பகல் நேரத்தின் போதும் பண்டா தொடர்ந்து அயர்வினால் பாதிப்படைந்திருந்தான். அவன் மருத்துவ பரிசோதனைக்கு சென்றிருந்த வேளை, அவனுடைய மருத்துவ கோப்பை (File) கையாண்ட வைத்தியர் குசாலிடம், பண்டா தான் உட்கொள்ளும் மருந்துகள் பற்றி குறிப்பிட்டான். கடந்த வருடம் மருத்துவராக வெளியேறிய வைத்தியர் குசால், இந்த குறிப்பிட்ட மருந்து அயர்வை ஏற்படுத்தும் என்பதனை அறியாதிருந்தான். அவன் பண்டாவை மருத்துவ பரிசோதனையில் சித்தியடை செய்தான்.

பின்பு பண்டாவை அமல் தனது லொறி ஒட்டுனராக வேலைக்கமர்த்தினான். அமல் இந்த லொறியை பொருட்களை கொண்டு செல்வதற்காக வாடகைக்கு அமர்த்தியிருந்தான். அமல் பண்டாவுடைய கடந்த கால பதிவுகள் உள்ளடங்களாக அவனது அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்தான். அவன் கவனமாக நடந்து கொள்ளும் ஒரு சாரதி என அறியக் கிடைத்தது. பண்டா, அமலுக்காக வேலை செய்ய ஆரம்பித்து சில மாதங்களின் பின்பு, சாந்தி என்பவள் தனது புதிய வீட்டுக்கு தளபாடங்களை ஏற்றிச் செல்வதற்காக அமலுடைய லொறியை வாடகைக்கு பெற்றாள். சாந்தியுடைய புதிய வீட்டுக்கு பொருட்களை எடுத்து சென்று கொண்டிருந்த போது பண்டாவுக்கு நித்திரை ஏற்பட்டது. லொறி வீதியை விட்டு விலகி வீதியோரத்தில் இருந்த சிறிசேனவுடைய காய்கறி விற்பனையகம் மீது மோதியது. சிறிசேன மோசமாக காயமடைந்தான். லொறியில் இருந்த ரூபா.1 மில்லியன் பெறுமதியுடைய 300 வருட பழைமை வாய்ந்த மேசை உட்பட அனைத்து தளபாடங்களும மிகவும் மோசமாக சேதமடைந்தன.

சாந்தி மற்றும் சிறிசேன ஆகியோர் தமக்கு ஏற்பட்ட நட்டங்களுக்கும் உளறுகளுக்கும், இழப்பீட்டை பெற விரும்புகின்றனர். அவர்கள் என்ன அடிப்படையில் யாருக்கு எதிராக வழக்கிடலாம் என்பது பற்றி அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

5. முரண்பாடான மற்றும் ஒரு சீரற்ற தீர்ப்புகளில் இருந்து சட்ட சேதச்சேய்மை கோட்பாட்டை தீர்மானிப்பதற்கு தோன்றிய பல எண்ணக்கருக்கள் தற்போது உள்ளன. இந்த பிரச்சினையை நீதிபதியுடைய பொது அறிவுக்கு விட்டுவிட வேண்டும்.

இக் கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? சட்ட சேதச் சேய்மை கோட்பாடு மீதான விதிகளுடன் தொடர்புறுத்தியும், தீர்ப்புச் சட்டங்களில் இருந்து பெறப்பட்ட உதாரணங்களுடனும் உமது விடையை ஆதாரப்படுத்துக.

6. *அவதூறு தொடர்பான சட்டம் வெளிப்படுத்தும் சுதந்திரம் மற்றும் தகவலறிவததற்கான உரிமை ஆகியவற்றின் இழப்பின் மீது தனிப்பட்டவர்களுடைய கௌரவத்தை பாதுகாக்கிறது.*

*இக்கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? உமது விடையை விளக்குவதற்கு வழக்குகளை ஆதாரம் காட்டி அவதூறு தொடர்பான சட்டத்தினை விமர்சித்து ஆராய்க. இலங்கை, தென்னாபிரிக்கா மற்றும் ஐக்கிய இராட்சியம் ஆகிய நியாயதிக்கங்களை நீர் ஆராய வேண்டும்.*

7. மாலா அரை – கிராம (Semi-rural) பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வசித்து வருகிறாள். பண்டா, ராமா மற்றும் டிக்கிரி ஆகியோர் அவளுடைய அயலவர்கள் ஆவர். அவர்கள் அவளது வீட்டை சுற்றி இருக்கின்ற காணியினை சொந்தம் கொண்டுள்ளனர்.

(அ). பண்டா ஒரு கோழிப்பண்ணையொன்றை வைத்திருக்கிறான். காற்று வீசுகின்றபோது பண்ணையில் இருந்து எஞ்சிய கோழிகளில் இருந்து வருகிற நாற்றம் சகிக்க முடியாதுடன் கோழிக்குஞ்சுகளின் சத்தம் மாலா வீட்டில் உள்ளவர்களுக்கு பகல் பொழுதின் போது இடைஞ்சலாக இருந்தது. அவளுடைய வேலைக்காரியான ரம்யா இனிமேல் தன்னால் வீட்டில் வேலை செய்ய முடியாது என மறுத்தாள். மேலும் மாலாவுடைய வயதுபோன அப்பா பெரோ, தற்போது மாலாவுடன் வசிப்பதற்காக வந்திருக்கிறார். அவர் ஒரு கடுமையான சைவ உண்ணும் நபராவர். கோழிப்பண்ணையில் ஒவ்வொரு நாளும் கோழிகள் கொல்லப்படுவதை எண்ணி மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளார்.

(ஆ) ராமா அண்மையில் தன்னுடைய காணியை வாங்கி, அந்த காணியை சுற்றிவர இருக்கும் நிலத்தில் பயிரிடப்படும் தேயிலையை அரைக்கும் செயற்பாட்டிற்காக தேயிலை தொழிற்சாலை ஒன்றை கட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளான். அவன் தனது வியாபாரத்தை இயலுமான வரை விரைவாக ஆரம்பிக்க இருப்பதால் அவனுடைய வேலையாட்கள் இரவு பகல் பாராமல் இயந்திரங்களுடன் வேலை செய்கின்றனர். பெரேராவுக்கு இரவு நித்திரை கொள்ள முடியவில்லை. ராமாவுடைய காணியை நோக்கி இருக்கின்ற தனது சமையல் அறைச் சுவரில் வெடிப்புகள் இருப்பதையும் மாலா அவதானித்தாள்.

(இ) மாலாவுடைய அயலவரான டிக்கிரி 6 மாதத்திற்கு முன்னர் காணியை வாங்கியுள்ளார். டிக்கிரி கழிவு உலோக (Scrap metal) வியாபாரம் ஒன்றை ஆரம்பித்துள்ளர். அவ்வியாபாரம் மூலம் அவர் கைவிடப்பட்ட வாகனங்களை வாங்கி அவற்றின் பாகங்களை மீள்புதுப்பிப்பார். நாள் தோறும் வாகனங்களை உடைக்கும் சத்தம் பல கிலோமீற்றர் வரை கேட்கிறது. டிக்கிரி அயலவர்களுக்கு இடைஞ்சலை ஏற்படுத்த கூடாது என கருதி மாலை 5 மணிக்கு தனது வேலையை நிறுத்துவான்.

பண்டா, ராமா, மற்றும் டிக்கிரி ஆகியோருக்கு எதிராக மாலா தனியார் தொல்லை வழக்கு கொண்டு வரமுடியுமா என்பது பற்றி அவளுக்கு ஆலோசனை வழங்குக.

பதிப்புரிமை பெற்றது.